# புதுச்சேரி காவல்துறை

## ❖ சமுதாயக் காவல் பணிகள் ❖

### தங்கள் கவனத்திற்கு

- சமுதாயத்தை பாதுகாப்பது நமது பொது கடமை.
- தங்கள் ஊர், வீடு, வாகனம், பிள்ளைகள், உடமைகளுக்கு பாதுகாப்பை உறுதி செய்வது தங்கள் கடமையாகும். அதற்கான ஆலோசனைகளுக்கு எங்களை அணுகலாம்.
- தங்கள் வீடு மற்றும் வாகனங்களுக்கு இரண்டுக்கும் மேற்பட்ட பூட்டுகளை போடுவதும், அவை கவனத்தில் இருப்பதாக மற்றவருக்கு உணரச் செய்யவேண்டும்.
- ஊர், வீடு, நிறுவனம், பள்ளி, கல்லூரி ஆகிய இடங்களில் கண்காணிப்பு கேமராவை (CCTV) பொருத்த வேண்டுமென்றும், அதில் முக்கிய இடங்களில் பேச்சு பதிவுரு (Voice Recorder) தொழில்நுட்பத்தை சேர்க்க வேண்டும் என்பதும் முக்கியமான வேண்டுகோள்.
- விலை உயர்ந்த பொருட்களை பாதுகாப்பதற்கு அருகில் உள்ள வங்கி நிலைப் பெட்டியைப் (Bank Locker) பயன்படுத்தவும்.
- குழந்தைகளுக்கோ, பெண்களுக்கோ எதிரான குற்றங்களை கண்டால் உடனே தங்களுக்கு நம்பிக்கையானவர்களின் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு காலம் தாழ்த்தாமல் தெரிவிக்கவும்.
- பொது இடங்களில் விளம்பரப் பட்டிகைகள் (Banners) வைப்பதை தவிர்த்து, ஊர் எழிலைப் பாதுகாக்க வேண்டும். இதுபோன்ற பட்டிகைகளை வைப்பது சட்டப்படி குற்றமாகும்.
- பள்ளி, கல்லூரி, மாணவ மாணவிகள் கலாச்சார விதிகளை மீறும் செயல்களை கண்டால் அதை அவர்கள் உணரும்படி அறிவுரை வழங்குதல் அல்லது உங்கள் நம்பிக்கை உடையவர்கள் மூலமாக சம்மந்தப்பட்டவர்களின் பெற்றோர்களிடமோ அல்லது அதிகாரிகளிடமோ காலம் தாழ்த்தாமல் தெரிவிக்கவும்.
- பேருந்தில் செல்லும்போது, தங்கள் கவனத்திற்கு வரும் சட்டவிரோத செயல்களையும், பெண்களுக்கு எதிரான குற்றங்களையும் கண்டால் அதை அவர்கள் உணரும்படி அறிவுரை வழங்குதல் அல்லது உங்கள் நம்பிக்கையுடையவர்கள் மூலமாக சம்மந்தப்பட்டவர்களின் பெற்றோர்களிடமோ அல்லது அதிகாரிகளிடமோ காலம் தாழ்த்தாமல் தெரிவிக்கவும்.
- நமக்கும், நம்மை சார்ந்தவர்களுக்கும் சுதந்திரம் இருப்பதை உணர்த்தும் வகையில் யாரையும் புண்படுத்தாமலும், அச்சுறுத்தாமலும், பிழைப்பு நடத்த வேண்டும். நமக்கென்ற தனித்தன்மையை அனைவரும் புகழக்கூடிய வகையில் வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- பேருந்தில் படிக்கட்டில் பயணம் செய்யக்கூடாது. அதேபோல் போக்குவரத்துக்கு இடையூறாக பாதையை ஆக்கிரமிக்கக்கூடாது.
- தாய்மைக் கலாச்சாரத்துக்கு மதிப்பூட்ட திருக்குறளின் அடிப்படையில் அமைந்த வாழ்வியல் முறையைப் பின்பற்றி சமுதாயக் கலாச்சாரத்தை சிறப்பாக அமைய செய்வோம்.
- பொது தொலைபேசி மையங்கள் (One rupee coin booth, STD booth), பொது இணைய வலைதள மையங்களைப் பயன்படுத்துவோரை கண்காணிக்கும் வகையில் பதிவேட்டினை முறையாக செயல்படுத்த வேண்டும்.
- யாரேனும் தங்களிடம் மிரட்டி மாமூல் மற்றும் நன்கொடை கேட்டாலோ, சுமை தூக்குவோர் என்ற போர்வையில் சுதந்திரத்திற்கு புறம்பாக நடந்தாலும், உடனே அதை முறையாக புகார் செய்ய வேண்டும். இதற்கு கண்காணிப்பு கேமரா (CCTV) பயன்பாடு மிகவும் உகந்தது.
- போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.

**POLICE PHONE NUMBERS**

www.police.puducherry.gov.in

Control Room 100

| | | | | | |
|---|---|---|---|---|---|
| SSP (Law & Order) | 9489205002 | STF | 9489205120 | Villianur PS | 2666321 |
| SP (North) | 9489205005 | CI Villianur | 9489205024 | Mangalam PS | 2666356 |
| SP (South) | 9489205006 | SHO Villianur | 9489205152 | Karikalampakkam PS | 2665348 |
| SP (Rural) | 9489205007 | SHO Mangalam | 9489205146 | AWPS (Villianur) | 2660385 |
| SP (Traffc) | 9489205008 | SHO Karikalampakkam | 9489205151 | Traffic (Villianur) | 2661246 |

அமஅபு.—137/29 (i)—5,000 பிரதிகள் (562)—23-4-2013.